**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ம் நாள் வியாழக்கிழமை**
**<u>I.A.No.04/2025 In O.S.No.139/2017</u>**

1. கண்ணனூர் (எ) கண்ணம்மாள்
2. ராமன் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**//எதிராக//**

1. தனலெட்சுமி
2. மாணிக்கம் .... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக 06.11.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள் தரப்பில் 27.09.2023 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 13 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

1) 1 ம் மனுதாரர் தனது மகன் 2 ம் மனுதாரருக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் இவ்வழக்கின் பிரதிவாதிகள். இவ்வழக்கானது சுவாதீன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு விசாரணை தொடங்கப்படாமல் 2020 ம் வருடம் கொரோனா ஊரடங்கு காரணமாக வழக்கு விபரம் மனுதாரர்களுக்கு தெரியாமல் போய்விட்டது.

2) பின்னிட்டு சமூகம் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள் நிறைவேற்று மனு எண்.06/2024 தாக்கல் செய்து அதில் சுவாதீனம் எடுக்க நடவடிக்கை எடுத்த விபரம் தெரிந்து வழக்கறிஞர் மூலம் விசாரித்த

போது 30.06.2023 அன்று வாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் மனுதாரர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது என்றும் பின்னிட்டு 03.08.2023 அன்று வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் மனுதாரர்களின் வாய்ப்பு மறுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்றும் பிறகு பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக 08.09.2023 அன்று வாய்தா போடப்பட்டு மேற்படி வாய்ப்பு முடிக்கப்பட்டு 27.09.2023 ல் வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ள விபரம் தெரிய வந்ததாகவும் மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களை முறையாக விசாரித்த பின்னிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டால் தான் அறுதியான தீர்ப்பாக இருக்க முடியும் என்றும் இவ்வழக்கில் தங்களுக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும் எனவே மேற்படி ஒரு தலைப்பட்ச தீர்ப்பை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்**

3) எதிர்மனுதாரர்கள் தங்கள் எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். அசல் வழக்கில் விசாரணை தொடங்கப்பட்டு பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படாமல் முடிக்கப்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானதாகும். நிறைவேற்று மனு தாக்கல் செய்த விபரம் உண்மையாகும். மேற்படி மனுவின் விபரம் அறிந்து வழக்கறிஞர் மூலமாக அசல் வழக்கு பற்றி விபரங்களை தெரிந்து கொண்டதாக சொல்வது பொய்யானதாகும். 27.09.2023 ல் ஏற்பட்ட தீர்ப்பு ஒருதலைப்பட்ச தீர்ப்பு என சொல்வது ஏற்கத்தக்கதல்ல. 538 நாட்கள் காலதாமதத்தை விளக்கும் அளவிற்கு எந்த ஒரு காரணங்களும் கூறப்படவில்லை.

4) உண்மையில் வா.சா.1 மற்றும் வா.சா.2 வாக்குமூலம் தாக்கல் செய்த பிறகு குறுக்கு விசாரணைக்காக பல வாய்தாக்கள் போடப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. பின்னிட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக பல வாய்ப்புகள் அளித்தும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் அளிக்காததால் அவர்களது சாட்சியம் முடிக்கப்பட்டது. ஒருதலைப்பட்ச உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு எவ்வித எதிர்வாதமும் இல்லாததால் மேற்படி வழக்கை அவர்கள் நடத்த முன்வரவில்லை.

5) நிறைவேற்று மனுவில் 27.08.2024 அன்று ஆஜராகும்படி அழைப்பாணை அனுப்பியும் ஆஜராகவில்லை. பின்னிட்டு நிறைவேற்று மனுவின் தொடர் நடவடிக்கையை தெரிந்து கொண்டு ஒரு வருடம் காலம் ஆஜராகாமல் இருந்து விட்டு தற்போது மேற்படி மனுவை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்தது ஏற்கத்தக்கதல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

6) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

7) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றும் அதை ரத்து செய்ய வேண்டுமென வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவை அனுமதிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என்று மனுவிற்கு ஆட்சேபனை செய்யப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், வாதிகள் தரப்பில் வா.சா.1 ன் விசாரணை தொடங்கப்பட்டு அவரது குறுக்கு விசாரணைக்காக பல வாய்தாக்கள் போடப்பட்டதற்கு பின்னிட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அவரது குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. அதே போன்று வா.சா.2 ன் சாட்சியம் விசாரிக்கப்பட்டதற்கு பின்னிட்டு குறுக்கு விசாரணை செய்யாததால் அவரது சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

8) பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா கொடுக்கப்பட்டு சாட்சிகள் ஏதும் விசாரிக்கப்படாததால் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதுரை ஏற்கப்பட்டு தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தங்களது சாட்சியம் மற்றும் ஆவணங்களை முழுமையாக தாக்கல் செய்யாமல் கொடுக்கப்பட்ட தீர்ப்பானது ஒரு தலைப்பட்ச தீர்ப்பு என வாதிட்டார்.

9) மேற்படி வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. வா.சா.1 மற்றும் வா.சா.2 குறுக்கு விசாரணை செய்யப்படாமல் பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஒரு சாட்சியமோ, ஆவணங்களோ தாக்கல் செய்யாமல் மேற்படி தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் தரப்பில் தங்களுக்கு

நல்ல எதிர்வாதம் உள்ளது என வாதிட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**
–இல்லை–
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**
–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**********************************
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**
**I.A.No. 04/2025**
**in**
**O.S.No. 139/2017**
**DRAFT / FAIR ORDER**
**D.D.13.11.2025**
**********************************